# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

*(Re-accredited with "A" Grade by NAAC)*

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024

**முனைவர் க. துரையரசன் எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,பிஎச்.டி.,**
தேர்வு நெறியாளர்

தொலைபேசி : 0431-2407016,2407060
தொலைநகலி : 0431-2407444
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
வலைதளம் : www.bdu.ac.in

---

**ந.க.எண்.தே.பி/இளநிலை/செய்முறைத்தேர்வுகள்/ஏப்ரல் 2019 நாள்: 29.01.2019**

**பெறுநர்**

முதல்வர்,
பல்கலைக்கழக இணைவுபெற்ற அனைத்துக் கல்லூரிகள்,(தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/ அம்மையீர்,

பொருள்: ஏப்ரல் 2019 –ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்பு பாடங்களுக்கான செய்முறைத் தேர்வுகளுக்கான தேர்வு கால அட்டவணை - தொடர்பாக.

-----

நடைபெறவிருக்கும் ஏப்ரல் 2019 பல்கலைக்கழக இளநிலை பட்டப்படிப்புகளுக்கான செய்முறைத் தேர்வுகளுக்கான தேர்வு கால அட்டவணை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பாடப்பிரிவுகள் | தேர்வுகள் துவங்கும் நாள் | தேர்வுகள் முடிவுறும் நாள் | செய்முறைத்தேர்வு மதிப்பெண்பட்டியல்கள் அஞ்சல்வழி அனுப்ப வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 1 | B.Sc., | 11-03-2019 | 23-03-2019 | தேர்வு முடிந்த மறுநாள் |
| 2 | B.A/B.B.A./B.Com., | 11-03-2019 | 13-03-2019 | தேர்வு முடிந்த மறுநாள் |

செய்முறைத் தேர்வுகள் (Practical exams for B.A., B.B.A., B.Sc., & B.Com Courses) நடத்திடும் பொருட்டு அதற்கான செய்முறைத்தேர்வு காலஅட்டவணை மூன்று நகல்கள் தயார் செய்து **22-02-2019** ஆம் தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி ஒப்புதல் பெற்ற பிறகே செய்முறைத் தேர்வுகளை நடத்த அறிவுறுத்தப்படுகிறது. இதனைத் தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கும், தொடர்புடைய பேராசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் **இணைப்பில் கண்ட நடைமுறைகளைத் தவறாது பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

மேலும் தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களின் எழுத்துத் தேர்வு அகமதிப்பீட்டு மதிப்பெண் பட்டியல்கள் 05-04-2019-க்குள் இணையதளத்தின் வாயிலாகவும் (http://exams.bdu.ac.in) மற்றும் அஞ்சல் வழியாகவும் தேர்வு நெறியாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அகமதிப்பெண்களைத் தேர்வு முடிவு வெளியிடுகின்ற நேரத்தில் கேட்டுப்பெற வேண்டிய நிலை உள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உடன் மதிப்பெண்களை அனுப்பிவைத்து மாணவ/மாணவியரின் தேர்வு முடிவுகள் விரைவாக வெளியிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

இக்கடிதம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தேர்வு நெறியாளர்**

**இணைப்பு**: செய்முறைத்தேர்வின் நடைமுறைகள்

# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

*(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் "A" தரச்சான்றிதழ் இரண்டாம் சுற்றில் பெற்றது)*

பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024

**முனைவர் க. துரையரசன் எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,பிஎச்.டி.,**
தேர்வு நெறியாளர்

தொலைபேசி : 0431-2407016,2407060
தொலைநகலி : 0431-2407444
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
வலைதளம் : www.bdu.ac.in


---

**ந.க.எண்.தே.பி/இளநிலை/செய்முறைத்தேர்வுகள்/ஏப்ரல் 2019 நாள்: 29.01.2019**

**பெறுநர்**

புறத்தேர்வாளர்கள் / செய்முறைத் தேர்வு
பல்கலைக்கழக இணைவுபெற்ற அனைத்துக் கல்லூரிகள்,(தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/ அம்மையீர்,

**பொருள்**: ஏப்ரல் 2019 – செய்முறைத் தேர்வில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தெரவிப்பது - தொடர்பாக.

- - -

ஏப்ரல் 2019 செய்முறைத் தேர்வின் போது கீழ்க்கண்ட நடைமுறைகளைத் தவறாது பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. புறத்தேர்வாளர்கள் நியமிக்கப்பட்ட கல்லூரிக்கு செய்முறைத்தேர்வுக்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாக செல்ல வேண்டும். அவ்வாறு செல்ல இயலாத நிலையில் தன்னிச்சையாக கல்லூரிகள் புறத்தேர்வாளர்கள் நியமிப்பதை தவிர்க்க வேண்டும். உடன் தேர்வு நெறியாளருக்ககுத் தெரிவித்து தேர்வு நெறியாளரின் அனுமதியின் பேரில் வேறு புறத்தேர்வாளர் நியமனம் செய்து அதன் பிறகே தேர்வு நடத்திட வேண்டும்.
2. கல்லூரியிலிருந்து பெறப்படும் செய்முறைத் தேர்வு மதிப்பெண் பட்டியல் கடிதவாயிலாக (Hard Copy) அக மற்றும் புறத் தேர்வாளர்கள், தேதியுடன் கூடிய கையொப்பம் கல்லூரி முதல்வரின் பரிந்துரை பெற்று அனுப்ப வேண்டும். செய்முறைத்தேர்வு முடிந்த மறுநாளே மதிப்பெண் பட்டியல் வருகைப்பதிவேடு ஆகியவை தேர்வு நெறியாளருக்கு அனுப்பப்பட வேண்டும்
3. கல்லூரியிலிருந்து முதன்முதலாக அனுப்பப்படும் செய்முறைத் தேர்வு மதிப்பெண் பட்டியல்/அகமதிப்பெண் பட்டியல்கள் தான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் தவறுகள் நேர்ந்ததாகக் கூறி பின்னர் பெறப்படும் மதிப்பெண் பட்டியல்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. செய்முறைத்தேர்வு மதிப்பெண்கள் Portal-ல் பதிவேற்றம் (Upload) செய்வதற்குண்டான உரிய தேதி பின்னர் அறிவிக்கப்படும். செய்முறைத்தேர்வு மதிப்பெண்கள் Portal-ல் பதிவேற்றம் (Upload) செய்வதற்கும் Hard Copy-ல் குறிப்பிடும் மதிப்பெண்களுக்கும் வேற்றுமை இருக்குமாயின், Hard Copy-ல் உள்ள மதிப்பெண்களே சரியானதாக கருதி ஏற்றுகொள்ளப்பட்டு Portal-ல் உள்ளது பரிசீலிக்கப்படமாட்டாது.

ஏப்ரல் 2019 செய்முறைத்தேர்வு சிறப்பாக நடைபெற தங்களது முழு ஒத்துழைப்பை நல்குமாறும் இக்கடிதம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தேர்வு நெறியாளர்**